மான்சாண்டோ டெக்னாலஜி எல்எல்சி மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

திருமிகு. நடாலியா வோரூஸ் மற்றும் பலர்

எதிராக

நுசிவீடு விதைகள் லிமிடெட் இயக்குநர் மூலம் மற்றும் பிறர்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள். 4616-4617/2018)

ஜனவரி 08, 2019

[மாண்புமிகு நீதியரசர்கள் திரு. ஆர். எஃப். நாரிமன் மற்றும் திரு. நவின் சின்ஹா]

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908:

பிரிவு 9 – வழக்கு / எதிர் பாத்தியம் – தீர்ப்பு வழங்குதல் – அதற்கான நடைமுறை – பிரதிவாதிகள் தங்களது பதிவுசெய்யப்பட்ட வணிகக் குறியை பயன்படுத்துவதிலிருந்து தடுக்க, அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரும் வழக்கு – மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 39, விதிகள் 1 மற்றும் 2-இன் கீழ் மனுத் தாக்கல் செய்வதன் மூலம் தற்காலிகத் உறுத்துக்கட்டளையும் கோரப்பட்டது - பிரதிவாதிகள் தங்களது எதிர்வாதுரையும், அத்துடன் காப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 64-இன் கீழ் காப்புரிமையை ரத்து செய்யக் கோரி தங்களது எதிர் பாத்தியையும் தாக்கல் செய்தனர் - உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி, உறுத்துக் கட்டளைக்கான

விண்ணப்பத்தின் மீது தீர்ப்பளிக்கும் போது, காப்புரிமைக் கோரிக்கையின் தன்மை மற்றும் அதன் விரிவான எல்லை ஆகியவை வாதுரைகள் நிறைவடைந்து, சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம் என்றும், இடைக்கால உறுத்துக் கட்டளை கோரும் நிலையில் அது குறித்து கருத்துத் தெரிவிக்கத் தேவையில்லை என்றும் அவதானித்தார் - தனி நீதிபதி எதிர் பாத்தியம் குறித்து அறிவிக்கை வெளியிட்டார் – இரு தரப்பினரும் மேல்முறையீடு செய்தனர் – உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம், பிரதிவாதிகளின் எதிர் பாத்தியத்தை அனுமதித்து, காப்புரிமையை தொடர்பாக வாதியினுடைய கோரிக்கையைத் தள்ளுபடி செய்தது - மேல்முறையீட்டில், தீர்வு: காப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 64 என்பது, சட்டத்திற்கு உட்பட்டு வழக்கிலுள்ள கோரிக்கைகளையும் எதிர் பாத்தியத்தையும் முறையாகப் பரிசீலிப்பதையே அடிப்படையாகக் கொண்டது மற்றும் சாட்சியங்கள் ஏதுமின்றி மேலோட்டமான முறையில் சுருக்கமாகத் தீர்ப்பு வழங்குவதை அல்ல - உ.ந.ச பிரிவு 9-இன் கீழ் தொடரப்பட்ட ஒரு வழக்கு மற்றும் அதிலுள்ள எதிர் பாத்தியம் ஆகியவற்றை எவ்வாறு பரிசீலித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்பது குறித்த விரிவான நடைமுறைகளை வழங்கியுள்ளது - உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம், தனி நீதிபதியின் அதிகார வரம்பைத் தன்வசப்படுத்திக்கொண்டு, இந்த எதிர்

பாத்தியத்தைச் சுருக்கமான முறையில் பரிசீலித்திருக்கக் கூடாது - தொழில்நுட்ப ரீதியாக சிக்கலான, நிபுணர்களின் சாட்சியம் தேவைப்படுகிற ஒரு வழக்கை, அதுவும் இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்கும் நிலையிலேயே, சுருக்கமான முறையில் தீர்ப்பு வழங்குவது விரும்பத்தக்கதும் அல்ல, அனுமதிக்கத்தக்கதும் அல்ல -நீதியர் ஆயம், இடைக்கால உறுத்துக் கட்டளையின் செல்லுபடித்தன்மையை ஆராய்வதோடு மட்டுமே தன்னை வரம்பிற்குட்படுத்தி இருந்திருக்க வேண்டும் வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், உறுத்துக் கட்டளை நிவாரணத்தின் தன்மையானது முறையாகவே இருந்தது, மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதில் தலையிட வேண்டிய அவசியமில்லை – வழக்கு தனி அமர் நீதியர்சரிடம் திருப்பி அனுப்பப்பட்டது – காப்புரிமைகள் சட்டம், 1970 – பிரிவுகள் 3(ஜே) மற்றும் 64.

மேல்முறையீட்டை முடித்து வைத்த இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வளித்தது:

தீர்வு: 1. காப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 64, ஒரு வழக்கில் தாக்கல் செய்யப்படும் எதிர் பாத்தியத்தின் அடிப்படையில் காப்புரிமையை ரத்து செய்வதற்கு வழிவகை செய்கிறது. இது, சட்டத்திற்கு உட்பட்டு வழக்கிலுள்ள

கோரிக்கைகளையும் எதிர் பாத்தியத்தையும் முறையாகப் பரிசீலிப்பதையே அவசியமான முன்நிபந்தனையாகக் கொண்டுள்ளது; மாறாக, சாட்சியங்கள் ஏதுமின்றி, வெறும் பாடப்புத்தகங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மேலோட்டமான முறையில் சுருக்கமாகத் தீர்ப்பு வழங்குவதை அல்ல. பிரிவு 9-இன் கீழ் தொடரப்பட்ட ஒரு வழக்கு மற்றும் அதிலுள்ள எதிர் பாத்தியம் ஆகியவற்றை எவ்வாறு பரிசீலித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்பது குறித்து உ.ந.ச விரிவான நடைமுறைகளை வழங்கியுள்ளது. உ.ந.ச ஆனது, எழுவினாக்களை வனைதல், தரப்பினரால் சாட்சிகளை விசாரணை செய்தல் மற்றும் குறுக்கு விசாரணை செய்தல், ஆவணங்களைக் கண்டறிதல்/ஆய்வு செய்தல் உள்ளிட்ட நடைமுறைகளை முடித்து, இறுதியாக வழக்கின் விசாரணை மற்றும் தீர்ப்பாணையில் முடிவடையக்கூடிய ஒரு செயல்முறையை கட்டாயமாக்குகிறது. ஒரு வழக்கை ஆரம்ப நிலையிலேயே முடித்து வைப்பது என்பது, முக்கியமாக உ.ந.ச கட்டளை 12 விதி 6-இன் கீழ் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலோ அல்லது கட்டளை 15 விதி 1-இன் கீழ் தரப்பினரிடையே முரண்பாடுகள் இல்லாத போதோ மற்றும் இதர காரணங்களின் அடிப்படையிலோ மட்டுமே சாத்தியமாகும்.

2. உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம், இந்த வழக்கின் உண்மைகளைக் கருத்தில் கொள்ளாமல், பொது வெளியில் இருந்து பெறப்பட்டதும், வழக்கில் சான்று ஆவணங்களாக தாக்கல் செய்யப்படாததுமான ஆவணங்களை மட்டுமே நம்பி, நிபுணத்துவ சாட்சிகளை விசாரணை செய்யாமல், சுருக்கமான முறையில் வழக்கை முடித்து வைத்திருக்கக்கூடாது. எழுப்பப்பட்ட விவகாரங்கள் வேதியியல் செயல்முறை, உயிர்வேதியியல் , உயிரி தொழில்நுட்பம் மற்றும் நுண்ணுயிரியல் செயல்முறைகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ சாட்சியங்கள் தேவைப்படும் சிக்கலான விஷயங்களாகும்; அதைவிட முக்கியமாக, உட்கரு அமில வரிசைப் பண்பு ஒருமுறை புகுத்தப்பட்ட பிறகு, அந்த வகைப்பாட்டிலிருந்து அதனை அகற்ற முடியுமா அல்லது முடியாதா என்பதும், காப்புரிமை செய்யப்பட்ட டிஎன்ஏ வரிசையானது ஒரு தாவரமா அல்லது தாவரத்தின் ஒரு பகுதியா என்பதும் மீண்டும் ஒருமுறை வழக்கின் இறுதி விசாரணையில் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்களாகும்.

அல்கா குப்தா எதிர் நரேந்திர குமார் குப்தா (2010) 10 எஸ் சி சி141: [2010] 1 எஸ் சி ஆர் 756-ஐ என்ற வழக்கு மூலம் சார்வுறப்பட்டுள்ளது .

3. உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம், 1-24 வரையிலான செயல்முறை கோரிக்கைகள் காப்புரிமை செய்யத் தகுதியற்றவை என்பதைத் தீர்மானிக்கும் தனி நீதிபதியின் அதிகார வரம்பைத் தன்வசப்படுத்திக்கொண்டு, இந்த எதிர் பாத்தியத்தைச் சுருக்கமான முறையில் தாமாகவே பரிசீலித்திருக்கக் கூடாது. தொழில்நுட்ப ரீதியாகச் சிக்கலான, அதோடு நிபுணர்களின் சாட்சியமும் தேவைப்படுகிற ஒரு வழக்கை, உறுத்துக் கட்டளை வழங்கும் நிலையிலேயே இத்தகைய முறையில் சுருக்கமாகத் தீர்ப்பளிப்பது, நிச்சயமாக விரும்பத்தக்கதும் அல்ல, சட்டப்படி அனுமதிக்கத்தக்கதும் அல்ல. இந்த வழக்கானது, காப்புரிமை பெறத்தக்கத் தன்மை மற்றும் காப்புரிமையிலிருந்து விலக்கு அளித்தல் ஆகியவை குறித்து, சாட்சியங்களின் அடிப்படையில் மட்டுமே ஆராயப்பட வேண்டிய சட்ட மற்றும் உண்மை கலந்த சிக்கலான கேள்விகளை உள்ளடக்கியிருந்தது.

4. நீதியர் ஆயம், தனி நீதிபதி வழங்கிய உறுத்துக் கட்டளை ஆணையின் செல்லுபடித்தன்மையை ஆராய்வதோடு மட்டுமே தன்னை வரம்பிற்குட்படுத்தி இருந்திருக்க வேண்டும். இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், தனி நீதிபதி வழங்கிய உறுத்துக் கட்டளை நிவாரணத்தின் தன்மையானது முறையாகவே இருந்தது, மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதில் தலையிட வேண்டிய அவசியமில்லை. தனி நீதிபதியின்

28.03.2017 தேதியிட்ட ஆணை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது மற்றும் வழக்கு சட்டப்படி தீர்வு காண்பதற்காக மீண்டும் தனி நீதிபதிக்கு மாற்றப்பட்டது.

குயோயு உள்ளிட்டோர் எழுதிய "கல்டிவர் டெவலப்மென்ட்டில் மார்க்கர்-அசிஸ்டெட் ரெக்கரண்ட் பேக்கிராசிங்" - **குறிப்பிடப்படுகிறது.**

பார்வையிடப்பட்ட தீர் முடிவுகள்

[2010] 1 எஸ் சி ஆர் 756 பத்தி 24 இல் குறிப்பிடப்பட்டது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 4616- 4617/2018.

புது தில்லி, தில்லி உயர்நீதிமன்றத்தில் எப் ஏ ஓ (ஓ எஸ்)(காம்ம்) எண். 86/2017 மற்றும் எப் ஏ ஓ (ஓ எஸ்)(காம்ம்) எண். 76/2017 ஆகிய வழக்குகளில் 11.04.2018 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுந்துள்ளது.

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள். 2019 இன் 188, 189-190 மற்றும் 191-192.

முனைவர் ஏ. எம். சிங்வி, நீரஜ் கிஷன் கவுல், கபில் சிபல், சஞ்சீவ் சென், அரவிந்த் பி. தத்தார், கே. வி. விஸ்வநாதன், ஷியாம் திவான், ஜெயந்த் பூஷன், கிருஷ்ணன் வேணுகோபால், ராணா முகர்ஜி, ஷியாம் திவான், என். கே. கவுல் மூத்த வழக்கறிஞர், பிரவீன் ஆனந்த், மகேஷ் அகர்வால், ரிஷி அகர்வாலா, அர்ச்சனா சங்கர், துருவ் ஆனந்த், ஸ்ரவன் சோப்ரா, கரண் லூத்ரா, விஷ்ணு தல்லாப்ரகடா, சுபம் குல்ஷெஸ்த்ரா, ஆதர்ஷ் ராமானுஜன், ஆர். வி. பிரபாத், விபவ் மித்தல், உதிதா பாட்ரோ, ஸ்ருதி அரோரா, முனைவர் நீதி வில்சன், அஸீம் சாமுவேல், அவிஷ்கர் சிங்வி, கிதிகா சூரி, இ. சி. அகர்வாலா, பிரவின் ஆனந்த், ஆர். என். கரஞ்சாவாலா, ரூபி சிங் அஹுஜா, தீப்தி சரின், சஞ்சீத் ரஞ்சன், அர்ச்சனா சங்கர், துருவ் ஆனந்த், ஷ்ரவன் சோப்ரா, திருமதி மாணிக் கரஞ்சாவாலா தி/ள். கரஞ்சாவாலா & கோ சார்பாக, ஸ்விக்ரிதி சிங்கானியா, சயன் ரே, அனிந்திதா மித்ரா, சௌமோ பாலித், சைதன்யா மேத்தா, தியா கபூர், எஸெனெஸ் ஓபன், அபிஷேக் சாகேத், நேஹா கந்தூரி, ரிஷப் சர்மா, சுகந்தா பத்ரா, ராகவ் ஆனந்த், விருந்தா பண்டாரி, பெரோஸ் அலி, கேதன் பால், ரீஜா வர்கீஸ், துஷார் பூஷன், ரஞ்சன் குமார் பாண்டே, சந்தீப் பிஷ்ட், லிஸ் மேத்யூ, ஜிதேந்திர குமார், ராம் கிஷன், ஆதித்யா தர்,

அனுஜ் திவாரி, ராகுல் குமார், ரித்விக் சஹாய், ஆதித்யா சர்மா, பிரனீத் பிரணவ், அங்கிதா சௌத்ரி ரதி, சந்தோஷ் குமார், நச்சிகேதா ஜோஷி, குஞ்சன் சிங், சத்யா மித்ரா, அமர் தேவ், பி. எஸ். சுதீர், ரிஷி மகேஸ்வரி, ஆன் மேத்யூ, பூஜா கட்டாரா, அபர்ணா கரீர், செந்தில் ஜெகதீசன், சோனாக்ஷி மல்ஹான், சுரிதி சௌத்ரி, மிருணால் கன்வார், சத்யா விக்ரம், அபிஷேக் சாகேத், ஷஹானா ்பரா, மனிஷ் மதுகர், ராகுல் துபே, எம். ஹக், சித்ரல் கம்பீர், பிரணவ் குப்தா, லேகா வி. ஜி., மனிஷா சிங், அபய் பாண்டே, தேவன்ஷு சஜ்லான், சன்யாத் லோதா, தீபக் ஜோஷி, ஆகாஷ் லம்பா உள்ளிட்ட வழக்கறிஞர்கள் அந்தந்தத் தரப்பினருக்காக முன்னிலையாகினர்.

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் **திரு.நவீன் சின்ஹா** வழங்கினார்.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 4616-4617/2018-இன் மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள், உரிமையியல் வழக்கு (காம்ம்) எண். 132/2016-ஐத் தாக்கல் செய்தனர். அதில், பிரதிவாதிகள் "போல்கார்ட்" மற்றும் "போல்கார்ட் II" பிராண்டு பருத்தி தொழில்நுட்பத் வணிகக்குறியை பயன்படுத்துவதைத்

தடுப்பதற்கும், வாதிகளின் பதிவுசெய்யப்பட்ட காப்புரிமை எண். 214436-ஐ மீறுவதைத் தடுப்பதற்கும் நிலையான உறுத்துக் கட்டளை கோரினர். மேலும், பிரதிவாதிகள் வாதிகளின் பதிவுசெய்யப்பட்ட காப்புரிமையை மீறும் வகையில், காப்புரிமை பெற்ற தொழில்நுட்பத்தைக் கொண்ட விதைகள்/வீரிய ரக விதைகளை விற்பனை செய்வதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ தடை விதிக்கவும், அதோடு கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்கவும் கோரினர். வசதிக்காக, தரப்பினர் அசல் வழக்கில் அவர்கள் வகித்த இடத்தைக் கொண்டே குறிப்பிடப்படுவர்.

3. வாதிகளைப் பொறுத்தவரை, தங்களது காப்புரிமைகளின்படி, பிரதிவாதிகளுடன் 21.02.2004 தேதியிட்ட ஓர் உள்-உரிம ஒப்பந்தத்தை பத்து ஆண்டுகள் கொண்ட ஆரம்ப காலக்கட்டத்திற்காகச் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தமானது, வாதிகளின் தொழில்நுட்பத்தின் உதவியுடன் "மரபணு மாற்றப்பட்ட வீரிய ரகப் பருத்தி நடவு விதைகளை" உருவாக்குவதற்கும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு அதனை வணிகரீதியாகப் பயன்படுத்துவதற்கும் பிரதிவாதிகளுக்கு உரிமை அளித்தது. மேலும், வாதிகளின் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக, பிரதிவாதிகள் உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பு செலுத்த வேண்டும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் வகைசெய்யப்பட்டிருந்தது. கால நீட்டிப்புக்குப் பிறகு, மாநில அரசால்

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விலைக்கட்டுப்பாட்டு முறையினால், உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பு செலுத்துவது தொடர்பான முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்த விலைக்கட்டுப்பாட்டு முறையை வாதிகளும் பின்பற்ற வேண்டும் எனப் பிரதிவாதிகள் வலியுறுத்திய நிலையில், அந்த ஒப்பந்தம் இறுதியில் 14.11.2015 அன்று வாதிகளால் ரத்து செய்யப்பட்டது. ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு, வழக்கு நிலுவையில் இருக்கும்போது தங்களது பதிவுசெய்யப்பட்ட காப்புரிமையை மீறும் வகையில், தங்களது பதிவுசெய்யப்பட்ட வணிகக் குறியைப் பிரதிவாதிகள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, வாதிகள் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (இனி 'சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) கட்டளை 39, விதிகள் 1 மற்றும் 2-இன் கீழ் உறுத்துக் கட்டளை கோரி விண்ணப்பம் தாக்கல் செய்தனர்.

4. பிரதிவாதிகள் தங்கள் எதிர்வாதவுரையில், மற்றவற்றுடன், தாவர வகைகள் மற்றும் விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 2001 (இனிமேல் 'பிபிவிஎஃப்ஆர் சட்டம்' என்று குறிப்பிடப்படுகிறது) கீழ் தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக வாதிட்டனர். இந்த வழக்கின் காப்புரிமையானது செல்லாதது, ஏனெனில் கோரிக்கைகள் 1-24 ஆகியவை ஆய்வகச் சூழலில் கையாளப்படும் கோரிக்கைகள் 25-27-இல் உள்ளது போல, ஒரு தாவர செல்லிற்குள் "உட்கரு

அமில வரிசையை" புகுத்துவதற்கான மரபணு பொறியியல் அல்லது உயிரித் தொழில்நுட்ப முறையைப் பற்றிய "செயல்முறை கோரிக்கைகள்" மட்டுமே, இது பிரதிவாதிகளால் கடைபிடிக்கப்பட்ட முழுமையான உயிரியல் செயல்முறையிலிருந்து மாறுபட்டது. உட்கரு அமில வரிசை என்பது தானாகவே இனப்பெருக்கம் செய்யும் திறனற்ற ஒரு வேதியியல் கலவை ஆகும், எனவே இது ஒரு நுண்ணுயிரி அல்ல. உயிருள்ள ஓர் உயிரினமான தாவரத்திற்குள் புகுத்தப்படும் போது மட்டுமே, அது அந்த உயிருள்ள உயிரினத்திற்கு பி டி-பண்புக்கூறை (பூச்சி எதிர்ப்புத் திறன்) வழங்குகிறது. பிரதிவாதிகள், காப்புரிமை மீறல் எதனையும் மறுத்ததோடு, டி என் ஏ வரிசைகளைக் கொண்டுள்ள தாவரங்கள் மற்றும் விதைகள் தொடர்பாக, காப்புரிமைகள் சட்டத்தின் (இனி 'சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 3(ஜே)-ஐ மீறுவதாகக் கூறி, சட்டத்தின் பிரிவு 64-இன் கீழ் காப்புரிமையை ரத்து செய்யக் கோரி 2016-ஆம் ஆண்டின் 51-வது எண் கொண்ட எதிர் பாத்தியத்தைத் தாக்கல் செய்தனர்.

5. கற்றறிந்த தனி நீதிபதி 28.03.2017 அன்று வாதிகளின் உறுத்துக் கட்டளை கோரும் விண்ணப்பத்தின் மீது முடிவெடுக்கும்போது, வழக்கில் எழும் சிக்கல்கள் அவசியமாக முறையான மெய்ப்பித்தலை, குறிப்பாக நிபுணர் கருத்தைக் கோருகின்றன என்று அவதானித்தார், காப்புரிமை போன்ற சிக்கலான

விவகாரங்களில், ஒரு காப்புரிமை கோரிக்கையின் விவரக்குறிப்புகளால் வழங்கப்பட்ட ஏகபோக உரிமையின் எல்லையைக் கண்டறிய அத்தகைய கருத்துக்கள் மிக முக்கியமானவை. காப்புரிமை கோரிக்கையின் தன்மை மற்றும் வரம்பு என்பது, தரப்பினரின் வாதங்கள் நிறைவடைந்து, எழும் சிக்கல்கள் மீது சாட்சியங்கள் அளிக்கப்பட்ட பின்னர் ஆராயப்பட வேண்டிய விஷயமாகும்; இது தற்காலிக உறுத்துக் கட்டளை வழங்கும் நிலையில் கருத்து தெரிவிக்கத் தகுதியானது அல்ல. சட்டத்தின் பிரிவு 48-இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தற்போதைய காப்புரிமையைக் கருத்தில் கொண்டு, வழக்கு நிலுவையில் இருக்கும்போது, தரப்பினர் அந்த உள்-உரிம ஒப்பந்தத்தின் கீழ் உள்ள தத்தமது கடப்பாடுகளுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும், பிரதிவாதி செலுத்த வேண்டிய உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பு நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. கற்றறிந்த தனி நீதிபதி அதே நேரத்தில் 2016-ஆம் ஆண்டின் 51-வது எண் கொண்ட எதிர் பாத்தியத்தின் மீது அறிவிப்பு மட்டுமே வெளியிட்டார். எனவே, 28.03.2017 தேதியிட்ட அந்த உறுத்துக் கட்டளை ஆணை, எதிர் பாத்தியத்தைப் பற்றி விவாதிக்கவோ அல்லது அதனைப் பரிசீலிக்கவோ இல்லை. 2004-ஆம் ஆண்டு முதல் உள்-உரிமத்தின் பலன்களைப் பெற்று வந்த பிரதிவாதிகள், வழக்கின்

காப்புரிமை அல்லது பதிவுசெய்யப்பட்ட வணிகக்குறிகள் தொடர்பாகத் தாங்கள் கோரும் சட்டப்பூர்வப் பாதுகாப்புகளைக் காரணமாகக் காட்டி, ஒப்பந்தத்தின் கீழ் உள்ள கடப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்று வாதிடுவது நியாயமற்றதாகத் தெரிகிறது என்று முதல் நோக்கில் அவதானிக்கப்பட்டது. சட்டப்பூர்வ விலைக்கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, 14.11.2015 அன்று வாதிகளால் செய்யப்பட்ட அந்த உள்-உரிம ஒப்பந்த ரத்து நடவடிக்கையானது நியாயமற்றதாகத் தெரிவதாக முதல் நோக்கில் கருத்து தெரிவிக்கப்பட்டு, அந்த ரத்து நடவடிக்கை எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

6. இதனால் பாதிக்கப்பட்ட வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இருதரப்பினரும் மேல்முறையீடு செய்தனர். நீதியர் ஆயம், வாதிகளின் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்ததோடு, சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் காப்புரிமை விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற பிரதிவாதிகளின் வாதத்தை உறுதி செய்தது. மற்றும் இரண்டு சட்டங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை அல்ல, ஆனால் பிரிவு 3 (ஜே) இன் கீழ் வரும் அனைத்து செயல்முறைகள் மற்றும் தயாரிப்புகளின் விஷயத்தில் பிரத்தியேகமானவை என்பதால், பிபிவிஎப்ஆர் சட்டத்தின் கீழ் பதிவு கோர வாதிகளுக்கு சுதந்திரம் உள்ளது என்றும் தெரிவித்தது. இதன் விளைவாக,

பிரதிவாதிகளின் எதிர் பாத்தியம் வெற்றி பெற்றது. இருப்பினும், இழப்பீடு மற்றும் பிற நிவாரணங்கள் கோரும் வரையில் மட்டும் வழக்கு தொடர அனுமதிக்கப்பட்டது. வாதிகள் தங்களது உள்-உரிம ஒப்பந்தக் கடப்பாடுகளைத் தொடர வேண்டும் என்றும், பிரதிவாதிகள் சட்டத்திற்குட்பட்டு உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பைச் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

7. தரப்பினரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர்கள் முனைவர் அபிஷேக் மனு சிங்வி, திரு. கபில் சிபல், திரு. நீரஜ் கவுல், திரு. கே. வி. விஸ்வநாதன், திரு. அரவிந்த் பி. தத்தார், திரு. ஜெயந்த் பூஷன், திரு. கிருஷ்ணன் வேணுகோபால், திரு. ஷியாம் திவான் மற்றும் திரு. சஞ்சீவ் சென், மற்றும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. பிரசாந்த் பூஷன் மற்றும் அனிந்திதா மித்ரா ஆகியோரின் வாதங்களை நாம் கேட்டோம்.

8. முனைவர் அபிஷேக் மனு சிங்வி, வாதிகளின் வழக்கானது தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் செல்லத்தக்க ஒரு காப்புரிமை மீறப்படுவதைத் தடுப்பதற்கான உறுத்துக் கட்டளை கோரியது என்று வாதிட்டார். காப்புரிமை பெறத்தக்க தகுதி இல்லாமை என்பது இந்த வழக்கில் ஒருபோதும் ஒரு எழுவினாவாக இருக்கவில்லை. பிரதிவாதிகள், காப்புரிமை மீறல் தொடர்பான

முதன்மைப் பிரச்சினையைச் செல்லாததாக்க மட்டுமே, காப்புரிமை பெறத்தக்க தகுதி இல்லை என்ற வாதத்தை முன்வைத்தனர். காப்புரிமையானது பெறத்தக்க தகுதியற்றது என்பதால் அதனை ரத்து செய்யக் கோரும் எதிர் பாத்தியம் குறித்து, கற்றறிந்த தனி நீதிபதியால் வாதங்கள் கேட்கப்படவோ அல்லது தீர்ப்பளிக்கப்படவோ இல்லை. 2016 ஆம் ஆண்டின் 51 ஆம் எண் கொண்ட எதிர் பாத்தியத்தின் மீது அறிவிப்பு மட்டுமே வழங்கப்பட்டது, அதே நேரத்தில் துணை உரிம ஒப்பந்த ரத்தை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட 2016-ஆம் ஆண்டின் 50-வது எண் கொண்ட எதிர் பாத்தியம் திரும்பப் பெறப்பட்டது. காப்புரிமையின் இருப்பு மற்றும் சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் காப்புரிமை விலக்கு தொடர்பான விவகாரமானது, சட்டம் மற்றும் உண்மைகள் கலந்த மிகவும் சிக்கலான ஒரு கேள்வியாகும்; இதற்கு முறையான மெய்ப்பித்தலும் நிபுணர் சாட்சியமும் தேவைப்படும் என்பதால், கற்றறிந்த தனி நீதிபதி சரியாகக் குறிப்பிட்டது போல, இது வழக்கு விசாரணையின் போதே பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். காப்புரிமையின் இருப்பு மற்றும்/அல்லது அதனை ரத்து செய்வது தொடர்பான விவகாரங்கள் சாட்சியங்கள் தேவைப்படும் விஷயங்கள் என்பதால், அவற்றைச் சுருக்கமான முறையில் கற்றறிந்த தனி நீதிபதியால் தீர்மானித்திருக்க முடியாது என்றும், வழக்கின் இறுதி விசாரணையின் போது மட்டுமே தீர்ப்பளிக்க முடியும்

என்றும் பிரதிவாதிகளே தங்களது மேல்முறையீட்டு நினைவுக் குறிப்பில் வாதிட்டுள்ளனர். வாதிகளின் கோரிக்கைகள் 25-27-இன் கீழ் மட்டுமே இருந்தன. 1-24 வரையிலான செயல்முறை கோரிக்கைகள் கற்றறிந்த தனி நீதிபதியின் பரிசீலனையில் ஒருபோதும் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை, இருப்பினும், நீதியர் ஆயம் அதில் ஆழமாக நுழைந்து, அந்தச் செயல்முறை கோரிக்கைகளும் செல்லாதவை எனத் தீர்மானித்தது.

9. வாதிகள் தங்களது காப்புரிமையின் செல்லத்தக்க தன்மை குறித்த ஒரு சுருக்கமான தீர்ப்பிற்கு ஒருபோதும் சம்மதம் தெரிவிக்கவில்லை. வாதிகளின் காப்புரிமை மீறப்பட்டுள்ளதா இல்லையா என்பதையும், அதன் வரம்பையும் தீர்மானித்து அதன் மூலம் உறுத்துக் கட்டளை நிவாரணத்தை அனுமதிப்பதா அல்லது மறுப்பதா என்பதை முடிவு செய்ய மட்டுமே நீதியர் ஆயம் குறிப்பிட்ட அந்தச் சம்மதம் வழங்கப்பட்டது. சட்டத்தின் கீழ் ஒரு செல்லத்தக்க பதிவுசெய்யப்பட்ட காப்புரிமையை வைத்துள்ள வாதிகள், அந்தப் காப்புரிமையை ஒரு சுருக்கமான பரிசீலனை மூலம் செல்லுபடியாக்குவதற்கோ அல்லது செல்லாததாக்குவதற்கோ ஒப்புக்கொண்டிருப்பார்கள் என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும். இந்தக் காப்புரிமையானது, கோரிக்கை 25-27-இல் உள்ளவாறு மூன்று வெவ்வேறு கூறுகளைக் கொண்ட ஒரு டி.என்.ஏ கட்டமைப்பு அல்லது

நியூக்ளியோடைடு வரிசையை உள்ளடக்கியது: அவையாவன: (i) ஒரு ஊக்குவிப்பான், (ii) Cry2Ab 5-எண்டோடாக்சின் உற்பத்தி செய்வதற்கான மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு மரபணு மற்றும் (iii) ஒரு ட்ரான்சிட் பெப்டைடு 6-ஐ உற்பத்தி செய்வதற்கான மூன்றாவது கூறு. இவ்வாறு உருவாக்கப்பட்ட டி.என்.ஏ கட்டமைப்பு இயற்கையில் இருப்பதல்ல, மேலும் இது ஒரு தாவரத்திற்குள் புகுத்தப்படும்போது அதற்குப் பூச்சிகளைத் தாங்கும் பண்பை வழங்குகிறது. அடுத்ததாக, ஒரு தாவரம் "பிணைப்புப் புரதமாக" உருவாக்கப்படுகிறது, இது கடத்துப் பெப்டைடுடன் பிணைக்கப்பட்ட Cry2Ab S-எண்டோடாக்சின் 7-ஐக் கொண்டுள்ளது. இந்தக் காப்புரிமைப் பொருள், பேசிலஸ் துரின்ஜியன்சிஸ் வகை உயிரினத்தின் பயன்பாட்டையும், Cry2Aa மற்றும் Cry2Ab எனப் பெயரிடப்பட்ட இரண்டு மரபணுக்களின் மேம்பாட்டையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மரபணு வரிசையும் பூச்சிக்கொல்லி பண்புகளைக் கொண்ட புரதங்களைத் தொகுக்கும் திறனுக்காக அறியப்பட்டவை. என் ஏ எஸ் என்பது ஒரு உயிருள்ள உயிரினம் அல்ல, மாறாக அது ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட ஒரு வேதியியல் பொருளாகும். ஒரு தாவர செல்லின் மரபணுத் தொகுதியில் ஒரு தனித்துவமான இடத்தில் என் ஏ எஸ்-ஐ நிலைநிறுத்துவதான 'நிகழ்வு' என்பது ஒரு தனிப்பட்ட, அடுத்தடுத்த மற்றும் முற்றிலும் மாறுபட்ட கண்டுபிடிப்பாகும், இதற்காக வாதிகள் 232681 என்ற

வேறொரு காப்புரிமையைப் பெற்றுள்ளனர், மேலும் அது இந்த வழக்கின் பொருப்பொருள் அல்ல. இந்த வழக்கில், கண்டுபிடிப்பு என்பது என் ஏ எஸ் ஆகும், மேலும் அந்த கண்டுபிடிப்பின் இலக்கு ஒரு தாவர செல்லில் அதன் பயன்பாடே ஆகும். தாவரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பூச்சிக்கொல்லித் திறனுள்ள அளவுகளில் நச்சுப் புரதம் இருப்பதை உறுதி செய்யவும், அதே சமயம் விவசாய ரீதியாக நிலையான தாவரங்களை உருவாக்கவும், தாவர செல்லின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த நச்சுப் புரதத்தை உற்பத்தி செய்து நிலைநிறுத்துவது என் ஏ எஸ்-ன் தன்மையாகும். குயோயு முதலானோரின் '**கல்டிவர் டெவலப்மென்ட்டில் மார்க்கர்-அசிஸ்டெட் ரெக்கரண்ட் பேக்கிராசிங்**' என்ற ஆய்வை மேற்கோள் காட்டி, ஒருமுறை தாவரத்திற்குள் புகுத்தப்பட்ட என் ஏ எஸ் மரபணுவானது மீண்டும் நீக்கப்படக்கூடியது என்றும், அது தாவர மரபணுத் தொகுதியின் ஒரு பகுதியாக மாறித் தனது காப்புரிமைப் பண்புகளை இழந்துவிடுவதில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. இவை அனைத்தும் நிபுணர் சாட்சியங்களின் அடிப்படையில் வழக்கில் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்களாகும்.

10. பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான திரு. விஸ்வநாதன் மற்றும் திரு. தத்தார் ஆகியோர், கோரிக்கைகள் 25-27 என்பவை தாவரத்தின் பாகங்களைக்

குறிக்கும் 'தயாரிப்பு கோரிக்கைகள்' என்றும், பின்னர் அதே கோரிக்கைகள் 'அடிப்படையிலேயே உயிரியல் செயல்முறை கோரிக்கைகள்' என்றும் வாதிட்டதன் மூலம், நேரடியாகவும் பரஸ்பரம் முரணாகவும் உள்ள நிலைப்பாடுகளை எடுத்துள்ளனர். கோரிக்கைகள் 1-24 என்பவை குறிப்பிடத்தக்க மனிதத் தலையீட்டைக் கொண்டுள்ளதால், அவை 'அடிப்படையிலேயே உயிரியல் செயல்முறைகள்' என வகைப்படுத்தப்பட்டு சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் விலக்கப்பட வேண்டியவை அல்ல. முனைவர் சிங்வி மிகவும் நேர்மையாக, உள்-உரிம ஒப்பந்தத்தை ரத்து செய்ததை தம்மால் ஆதரிக்க இயலவில்லை என்றும், வாதிகளின் உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பு கோரிக்கைகள் சட்டப்பூர்வ விலை நிர்ணய முறைக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டார். வாதிகளின் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட விதைகள், மற்ற ஒத்த விதைகளை விட அதிக அளவில் விற்பனையாகின்றன. எந்தவொரு இந்திய விவசாயிக்கும் எதிராக காப்புரிமை மீறலுக்காக வழக்குத் தொடரும் எண்ணம் வாதிகளுக்கு இல்லை. இறுதியாக, இந்த நீதிமன்றம் காப்புரிமை விவகாரம் மற்றும் அதன் மீறல் குறித்துத் தீர்மானிக்க முழு வழக்கையும் திருப்பி அனுப்பலாம், அல்லது காப்புரிமை விவகாரத்தை மட்டும் முடிவு

செய்துவிட்டு, மற்ற விவகாரங்களுக்காக வழக்கைத் திருப்பி அனுப்பலாம் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

11. திரு. கபில் சிபல் வாதாடுகையில், ஒரு வேதியியல் பொருள்/மரபணு/டி.என்.ஏ கட்டமைப்பு என்பது ஒரு தாவர வகை அல்ல, எனவே அது பிபிவிஎஃப்ஆர் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெறத் தகுதியற்றது என்று குறிப்பிட்டார். ஒரு மரபணு என்பது தாவர வகையாக இருக்க முடியாது; மேலும், சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 15-உடன் இணைந்த பிரிவு 2(za)-இல் உள்ள முன்நிபந்தனைகளை நிறைவு செய்யாத காரணத்தால், அதற்கு அத்தகைய பதிவு மறுக்கப்படும். ஒரு மரபணு என்பது "மிகக் குறைந்த நிலையில் உள்ள ஒரு தாவர வகைப்பாட்டுத் தொகுதிக்குள்" அடங்கும் ஒரு "தாவரத் தொகுப்பாக" இருக்க முடியாது, இது எளிய மொழியில் கூறினால், ஒரு தாவரத்தின் மிகக் குறைந்த நிலையான "சிற்றினம்" என்பதற்குள் அது அடங்காது என்று பொருள்படும். பிபிவிஎஃப்ஆர் சட்டம் 2007 முதல் நடைமுறைக்கு வந்தது, கடந்த 11 ஆண்டுகளில் அதன் கீழ் எந்தவொரு மீறல் நடவடிக்கையும் தொடரப்படவில்லை அல்லது உறுத்துக் கட்டளை பெறப்படவில்லை. உயிரி-தொழில்நுட்பத் துறை தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில், இந்த நாட்டின் நூறு கோடிக்கும் அதிகமான மக்களின் பசியைப் போக்குவதில் வேளாண் உயிரி-தொழில்நுட்பம் வகிக்க

வேண்டிய பங்கையும், உயிரியல் மற்றும் உயிரற்ற அழுத்தங்களைச் சமாளிக்கவும், உற்பத்தித் திறன் மற்றும் ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்தவும் 'புதிய மரபணுக்கள்' வகிக்கக்கூடிய பங்கினையும் அங்கீகரித்துள்ளது.

12. காப்புரிமை பெற்ற என் ஏ எஸ் என்பது எந்தவொரு உயிரியல் செயல்முறையாலும் உருவாக்கப்பட்டதல்ல என்று திரு. நீரஜ் கவுல் சமர்ப்பித்தார். ஊக்குவிப்பான், Cry2Ab எண்டோடாக்சின் உற்பத்தி செய்வதற்கான மனிதனால் உருவாக்கப்பட்ட மரபணு மற்றும் கடத்துப் பெப்டைடை உருவாக்குவதற்கான மூன்றாவது கூறு ஆகியவற்றைச் சரியாகக் கலந்து, அதன் மூலம் டி.என்.ஏ கட்டமைப்பை உருவாக்குவது என்பது முழுக்க முழுக்க மனிதத் தலையீட்டின் உருவாக்கமே ஆகும். நீதியர் ஆயம், இந்தக் கண்டுபிடிப்பைத் தவறாக ஒரு 'தாவர வகை' என்று கருதியுள்ளது. பிபிவிஎஃப்ஆர் சட்டமானது தாவர வகைகள் மற்றும் விதைகளை மட்டுமே உள்ளடக்கியது. காப்புரிமைகள் சட்டம் மற்றும் பிபிவிஎஃப்ஆர் சட்டம் ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று விலகிய தனித்துவமானவை ஆகும்

13. பிரதிவாதிகள் சார்பில் வாதாடிய திரு விஸ்வநாதன், பாரம்பரிய இனப்பெருக்க முறைகள் மூலம் பிரதிவாதிகளால் உருவாக்கப்பட்டு,

விவசாயிகளுக்கு விற்கப்படும் மரபணு மாற்றப்பட்ட பருத்தி விதைகளின் மீது எந்தவொரு காப்புரிமை உரிமைகளையும் கோர முடியாது என்று சமர்ப்பித்தார். வாதிகளின் காப்புரிமை உரிமைகள் ஏற்கப்பட்டால், மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் தொடர்பான தாவர அறிவுசார் சொத்துரிமைக்காக பி பி வி எப் ஆர் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகள் முற்றிலும் தோல்வியடைந்துவிடும். வாதிகளின் கூற்று அடிப்படையில் ஒரு புதிய ரகத்தை உருவாக்கிய "இனப்பெருக்காளர்" என்பதே அடிப்படையான வாதம் என்றும், எனவே என் ஏ எஸ்-ஐக் கொண்டுள்ள அவர்களின் கொடை விதை பி பி வி எப் ஆர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யத்தக்கது என்றும், அவ்வாறு பதிவு செய்த பிறகு பிரிவு 26-இன் கீழ் அவர்கள் பலன் பகிர்வுக்குத் தகுதியுடையவர்கள் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் ஒரு தாவரம் அல்லது தாவரத்தின் பாகத்திற்கு எந்தவொரு காப்புரிமையும் வழங்க முடியாது. காப்புரிமை மீறல் பகுப்பாய்வு என்பது இரண்டு படிகளைக் கொண்டது: கோரப்பட்ட உரிமைகளைச் சரியாகக் கட்டமைப்பது மற்றும் அந்தத் தயாரிப்பானது அவ்வாறு கட்டமைக்கப்பட்ட உரிமைகளை மீறுகிறதா என்பதைத் தீர்மானிப்பது. வாதிகளின் காப்புரிமை கோரிக்கையானது ஒருபோதும் ஒரு குப்பியில் உள்ள வேதியியல் வரிசைக்கானது அல்ல. வாதிகள் கோரும் கண்டுபிடிப்பானது ஏற்கனவே உள்ள

தொழில்நுட்பத்தின் ஒரு மேம்பாடு மட்டுமே; அதாவது, எண்டோடாக்சின் புரதத்தை பிளாஸ்டிட் பகுதியில் நிலைநிறுத்துவதன் மூலம், ஒரு தாவரமானது அதிக அளவிலான நச்சுப் புரதத்தை வெளிப்படுத்த ஒரு வழியைக் கண்டறிந்ததாகவும், அதன் மூலம் பூச்சி எதிர்ப்புத் திறனைக் குறைத்து, அதே நேரத்தில் உருவ அமைப்பில் சாதாரணமான தாவரங்களை உருவாக்குவதாகவும் அவர்கள் உரிமை கோரினர். மேலும், வழக்குத் தொடர் வரலாற்றுத் தடை அடிப்படையில், மரபணு மாற்றப்பட்ட பி டி-பருத்தி விதைகளின் மீது உரிமை கோருவதிலிருந்து வாதிகள் தடுக்கப்பட்டுள்ளனர். நீதியர் ஆயத்தின் உத்தரவு சம்மதத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதால், வாதிகள் தற்போது அதற்கு மாறாக வாதிட இடமில்லை.

14. கோரிக்கைகள் 25-27-இல் உள்ள என் ஏ எஸ் ஒரு வேதியியல் பொருள் என்பது தவறானது என்று திரு. தத்தார் சமர்ப்பித்தார்; ஏனெனில், ஒரு தாவரத்திற்குள் புகுத்தப்படும் எந்தவொரு வேதியியல் பொருளும் அந்தத் தாவரத்தின் விதைகளுக்கோ அல்லது அதன் வருங்கால சந்ததிகளுக்கோ கடத்தப்பட முடியாது, ஏனெனில் அந்த வேதியியல் பொருள் தாவரத்தினாலேயே வளர்சிதை மாற்றம் செய்யப்பட்டுவிடும் மற்றும் ஒருபோதும் அதன் விதைகளுக்குக் கடத்தப்படாது. மேலும், கோரிக்கைகள் 25-27-இன்

சொற்களின்படியே, என் ஏ எஸ் என்பது ஒரு தாவர மரபணுவாகும், இது செல் துணை மட்டத்தில் இருப்பதனால் தாவரத்தின் ஒரு உள்ளார்ந்த, அத்தியாவசியமான மற்றும் ஒருங்கிணைந்த பகுதியாகும். திசு வளர்ப்பு எனும் உயிரியல் செயல்முறையின் மூலம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பிறகு அந்த செல்லானது ஒரு மரபணு மாற்றப்பட்ட தாவரமாக உருவாகிறது; இத்தாவரம் அத்தகைய மரபணு மாற்றப்பட்ட தாவரங்களின் அத்தியாவசியப் பண்புகளைக் கொண்ட விதைகளை உருவாக்குகிறது. எனவே, கோரிக்கைகள் 25 முதல் 27 வரையிலானவை வெறும் ஒரு 'மரபணுவை' மட்டுமே குறித்தாலும், அவை தாவரத்தின் பிரிக்க முடியாத மற்றும் பரம்பரையாகக் கடத்தப்படக்கூடிய ஒரு பகுதியாகவே வெளிப்படும் என்பதால், அவற்றிற்கு காப்புரிமை வழங்க முடியாது. தாவரத்திற்குள் புகுத்தப்பட்ட என் ஏ எஸ் மரபணுவானது, ஒரு மீள முடியாத உயிரியல் செயல்முறையின் மூலம் துணை செல் மட்டத்தில் தாவரத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக மாறிவிடுகிறது. இது மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரத்தின் ஒவ்வொரு செல்லிலும் காணப்படுகிறது. இது நச்சுப் புரதத்தை உருவாக்குவதற்காகத் தாவரத்திற்குள் வெளிப்படுவது மட்டுமின்றி, சந்ததித் தாவரங்களுக்கு நிரந்தரமாகப் பரம்பரையாகக் கடத்தப்படுகிறது. இது ஒரு குப்பியில் அடைத்து அப்படியே விற்கக்கூடிய ஒரு "தயாரிப்பாக" முடிவதில்லை. உரிமைக்

கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பயனுள்ள பொருளைத் தரும் வகையில் அவை கட்டமைக்கப்பட வேண்டும், ஆனால் விவரக்குறிப்புகளும் கோரிக்கைகளும் ஒன்றாகப் பார்க்கப்பட்டு கட்டமைக்கப்பட வேண்டும்.

15. திரு. ஜெயந்த் பூஷன் சமர்ப்பித்ததாவது, வாதிகள் என் ஏ எஸ் -ஐ ஒரு குப்பியில் கொண்டு வரவில்லை, மாறாக என் ஏ எஸ் -ஐக் கொண்டுள்ள தாவர விதைகளையே இறக்குமதி செய்தனர். இந்த விதைகள் காப்புரிமையால் பாதுகாக்கப்பட்டவை அல்ல. இந்திய விதை நிறுவனங்களுக்கு ஏற்கனவே என் ஏ எஸ் /பி டி . பண்பு ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் முளைக்கும் திறன் கொண்ட கொடை விதைகள் வழங்கப்பட்டன. இந்திய விதை நிறுவனங்கள் செய்வது என்னவென்றால், வாதிகளின் தாவரங்களில் ஒன்றை, இந்தியாவில் சாகுபடிக்கு ஏற்ற தங்களுக்கே உரித்தான இந்திய ரகத் தாவரங்களுடன் கலப்பு செய்து, ஒரு மூன்றாவது அல்லது புதிய கலப்புப் பருத்தி ரகத்தை உருவாக்குகின்றன; இது காய்ப்புழுவை எதிர்ப்பதற்காக வாதிகளின் ரகத்திலிருந்து பி டி. பண்பையும், தாங்கள் உருவாக்கிய ரகங்களிலிருந்து இதர பண்புகளையும் கொண்டிருக்கும். இந்திய விதை நிறுவனங்கள் என் ஏ எஸ்-ஐத் தனிமைப்படுத்தப்பட்ட முறையில் பயன்படுத்துவது இல்லை என்பதாலும், காப்புரிமையில் விவரிக்கப்பட்டுள்ள முறையின்படி என் ஏ எஸ்-ஐத் தாவரத்திற்குள் புகுத்தும் முறையை அவர்கள்

பயன்படுத்தாததாலும், அங்கு காப்புரிமை மீறல் எதுவும் இல்லை. என் ஏ எஸ் என்பது அடிப்படையிலேயே ஒரு உயிரியல் செயல்முறையாகும், இதில் காப்புரிமை பெற்ற தயாரிப்பு தனியாகப் பயன்படுத்தப்படுவதில்லை அல்லது ஒரு தாவரத்திற்குள் புகுத்தும் காப்புரிமை பெற்ற செயல்முறையும் பயன்படுத்தப்படுவதில்லை; இந்திய விதை நிறுவனங்களால் என் ஏ எஸ் உருவாக்கப்படுவதோ அல்லது பயன்படுத்தப்படுவதோ இல்லை. ஒரு சோதனைக்குழாயில் உள்ள மரபணு வரிசைக்கான காப்புரிமையானது, பி பி வி எப் ஆர் சட்டத்தின் பிரிவுகள் 30 மற்றும் 39-இன் கீழ் உள்ள முக்கியமான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகளின் உரிமைகளை ரத்து செய்யவோ அல்லது இல்லாமலாக்கவோ முடியாது. பிரிவு 39 என்பது விவசாயிகளின் உரிமைகள் தொடர்பானது; இது ஒரு விவசாயி தான் விளைவித்த விளைபொருட்களை, அந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு பதிவுசெய்யப்பட்ட ரகமாக இருந்தாலும் கூட, சேமித்து வைக்கவும், பயன்படுத்தவும், விதைக்கவும் மற்றும் மறுவிதைப்பு செய்யவும் அவருக்கு உரிமையளிக்கிறது. இறுதியாக, நீதிமன்றம் நீதியர் ஆயத்தின் உத்தரவை உறுதிப்படுத்தத் தயாராக இல்லை என்றால், தடையுத்தரவு விவகாரம் குறித்து புதிய விசாரணைக்காக இந்த விவகாரத்தை மீண்டும் நீதியர் ஆயத்திற்கே திருப்பி அனுப்பலாம், ஏனெனில்,

28.03.2017 தேதியிட்ட தடையுத்தரவு ஆணையின் சரியான தன்மை குறித்து நீதியர் ஆயத்தால் ஒருபோதும் சோதிக்கப்படவோ அல்லது பரிசீலிக்கப்படவோ இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

16. செயற்கையான என்.ஏ.எஸ் ஒரு தாவரத்திற்குள் புகுத்தப்பட்டு, அந்தத் தாவரம் காய்ப்புழுக்களுக்கு நச்சாக இருக்கும் டெல்டா எண்டோடாக்சினை உற்பத்தி செய்யத் தொடங்கும் வரை, வாதிகளின் காப்புரிமை கோரிக்கையில் எந்தவொரு கண்டுபிடிப்புத் திறனும் இல்லை என்று திரு. திவான் சமர்ப்பித்தார். ஒரு தாவரத்தின் பாகமாக மாறுவதைத் தவிர மற்றும் ஒரு மரபணு மாற்றப்பட்ட தாவரத்தை உருவாக்குவதைத் தவிர, என் ஏ எஸ்-க்குத் தொழில்முறைப் பயன்பாட்டிற்கான எந்தத் திறனும் இல்லை. காப்புரிமைகள் சட்டத்தின்படி ஒரு கண்டுபிடிப்பிற்கான அடிப்படைத் தேவைகள், அதனைப் புகுத்தும் நிலை வரை இல்லை. அந்தத் தாவர செல்லிற்குள் என் ஏ எஸ் புகுத்தப்படும்போதுதான் அதன் கண்டுபிடிப்புத் தன்மைகள் தொடங்குகின்றன, அதற்கு முந்தைய நிலையில் இல்லை. ஒருமுறை, தாவர செல்லிற்குள் என் ஏ எஸ் புகுத்தப்பட்டவுடன், பிரிவு 3(ஜே)-இன் கீழான விலக்கு பொருந்துகிறது மற்றும் பி பி வி எப் ஆர் சட்டம் செயல்பாட்டுக்கு வருகிறது.

17. மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் (ஆய்வகத்தில் மறுசீரமைப்பு மரபணு தொழில்நுட்பத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவை) மற்றும் ஒரு புதிய தாவரம், ரகம் அல்லது சிற்றினம் ஆரம்பத்தில் மரபணு கையாளுதல் மூலம் உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட, பாரம்பரிய இனப்பெருக்க நுட்பங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவை ஆகிய இரண்டின் காப்புரிமைத் தன்மையையும் அது விலக்குகிறது என்பது தெளிவாகிறது, அந்தத் தாவரம், ரகம் அல்லது சிற்றினத்தின் அடுத்தடுத்த உற்பத்தி அல்லது பெருக்கம் "அடிப்படையிலேயே ஒரு உயிரியல் செயல்முறை" மூலம் செய்யப்படும் பட்சத்தில், அந்த உயிரியல் செயல்முறைக்குச் சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் காப்புரிமை வழங்க முடியாது என்று திரு. வேணுகோபால் சமர்ப்பித்தார். சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழான காப்புரிமை விலக்கு ஒருவேளை பொருந்தவில்லை என்றாலும் கூட, பருத்திச் செடியின் தாவரங்கள் அல்லது பிடி-மரபணுவைக் கொண்டுள்ள விதைகளை விவசாயிகள் உருவாக்குவது, பயன்படுத்துவது, விற்பனைக்கு வழங்குவது அல்லது விற்பனை செய்வதைத் தடுக்கும் உரிமையை வாதிகள் கோர இக்காப்புரிமை ஒருபோதும் அனுமதிக்காது. ஒரு செயற்கை மரபணு மற்றும் அதை ஒரு தாவரத்தின் மரபணுத் தொகுதிக்குள் புகுத்தும் செயல்முறைக்கான காப்புரிமையானது, அந்தச் செயற்கை மரபணுவைக் கொண்டுள்ள ஒரு தாவரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு

48-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பயன்படுத்த வாதிகளுக்குத் தகுதியளிக்காது. சட்டத்தின் பிரிவு 48-இன் கீழான பாதுகாப்பு என்பது, பிடி-மரபணு தயாரிப்பையோ அல்லது அந்த மரபணுவை பருத்தித் தாவரத்தின் மரபணுத் தொகுதிக்குள் புகுத்தும் செயல்முறையையோ மறுஉருவாக்கம் செய்ய முனையும் பிற உயிரி-தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு எதிராகப் பயன்படுத்தத்தக்கது. காப்புரிமைகள் சட்டம் மற்றும் பி பி வி எப் ஆர் சட்டம் ஆகிய இரண்டுமே, விவசாயிகள் அதிகப்படியான விதை விலைகளால் சுமைக்குள்ளாகாமல் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதைத் தங்கள் பிணைப்பாகக் கொண்டுள்ளன.

18. திரு. பிரசாந்த் பூஷன், திரு. சஞ்சீவ் சென் மற்றும் திருமதி ஆனந்திதா மித்ரா ஆகியோர் இடையீட்டாளர்கள் சார்பாகச் சமர்ப்பித்ததாவது, ஒரு தாவர செல்லின் ஒரு பகுதியாக மாறி, அந்தத் தாவர செல்லினால் படியெடுத்தல், பெயர்த்தல், ற்றும் மறுஉருவாக்கல் ஆகிய அடிப்படையிலேயே உயிரியல் செயல்முறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு, தேவையான புரதத்தை உற்பத்தி செய்யும் வரை, என் ஏ எஸ் ஆனது "தொழில்முறைப் பயன்பாட்டிற்குத் தகுதியானது" அல்ல. உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டம், இந்தியாவில் காணப்படும் எந்தவொரு உயிரியல் வளங்களையும் வணிக ரீதியான பயன்பாட்டிற்காகப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது; மேலும் இதில் மரபணுத்

தலையீடு மூலம் பயிர்கள் மற்றும் கால்நடைகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும் மரபணுக்களும் அடங்கும். இதற்கு தேசிய உயிரியல் பன்முகத்தன்மை ஆணையத்திடம் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும், ஆனால் வாதிகளால் அத்தகைய அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது. என் ஏ எஸ் ஆனது ஒரு தாவரத்திற்கு ஒரு பண்பை மட்டுமே சேர்க்கிறது, இது கொடை விதைகளை உருவாக்கும் ஒரு மரபணு மாற்றப்பட்ட ரகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. அத்தகைய விதைகள் சட்டத்தின் பிரிவு 3(ஜே)-இன் கீழ் காப்புரிமை பெறத்தக்கவை அல்ல; இருப்பினும், வாதிகள் பிபிவிஎஃப்ஆர் சட்டத்தின் பிரிவு 2(எச்)-இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, அந்தச் சட்டத்தின் விதிகளின் கீழ் பலன் பகிர்வுக்கு தகுதியுடையவர்களாக இருக்கலாம். வாதிகளின் இந்த உரிமை கோரலானது, இதில் நேரடியாகத் தொடர்புடைய தரப்பினரைத் தாண்டியும் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

19. தரப்பினர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட அந்தந்த வாதங்களை நாங்கள் பரிசீலித்தோம். கேள்விக்குரிய காப்புரிமையில் உள்ள உண்மைகள் மற்றும் தொழில்நுட்ப செயல்முறைகள், இந்தச் சட்டத்தின் விதிகள், பி பி வி எப் ஆர் சட்டம் மற்றும் காப்புரிமைகளைக் கட்டமைப்பதற்கான பெருமளவிலான முன்மாதிரித் தீர்ப்புகள், உலக வர்த்தக அமைப்பு, வர்த்தகம் மற்றும் வரிகள் குறித்த பொது

ஒப்பந்தம், அறிவுசார் சொத்துரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் ஆகிய ஒப்பந்தங்களின் கீழான கடப்பாடுகள் மற்றும் அதன் விளைவாக 25.06.2002 அன்று கொண்டுவரப்பட்ட 2002-ஆம் ஆண்டு காப்புரிமைத் திருத்தச் சட்டம் ஆகியவை குறித்து மிகவும் விரிவான வாதங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், நாங்கள் பிறப்பிக்க உத்தேசித்துள்ள ஆணையின் தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்த நிலையில் அவற்றைப் பற்றி விவாதிக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறோம்; மேலும், உண்மைகள் மற்றும் சட்டம் தொடர்பான அனைத்துக் கேள்விகளையும் பொருத்தமான நடைமுறைகளில் பரிசீலனைக்கு முன்வைப்பதற்காகத் திறந்து விடுகிறோம்.

20. காப்புரிமை கோரிக்கைகள் 1-24 செயல்முறைகள் தொடர்பானவை, அதேசமயம் கோரிக்கைகள் 25-27 என் ஏ எஸ் எனப்படும் வேதியியல் தயாரிப்பு தொடர்பானவை. வாதிகளின் கூற்றுப்படி, பிந்தையது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு டி.என்.ஏ அமைப்பு ஆகும்; இது இயற்கையில் இல்லை, மேலும் இயற்கையில் இருக்கும் ஒரு தாவரத்தின் பாகமாகவும் இது இருந்ததில்லை. இந்த டி.என்.ஏ அமைப்பானது ஒரு தாவரத்திற்குள் புகுத்தப்பட்டது, இது அந்தத் தாவரத்திற்குப் பூச்சி எதிர்ப்புத் திறனை வழங்குகிறது. இது மூன்று வெவ்வேறு கூறுகளைக் கொண்டுள்ளது, அதாவது (i) ஒரு

ஊக்குவிப்பான், (ii) Cry2Ab 5-எண்டோடாக்சின் உற்பத்திக்கான ஒரு மரபணு மற்றும் (iii) ட்ரான்சிட் பெப்டைட் உற்பத்திக்கான மூன்றாவது கூறு. இந்த மூன்றில், Cry2Ab 5-எண்டோடாக்சின் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு மரபணு என்று கூறப்படுகிறது. இந்த நியூக்ளிக் அமில வரிசை பின்னர் தாவரத்தின் செல்லுக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் புகுத்தப்படுகிறது; இதன் விளைவாக, கடத்து பெப்டைடுடன் பிணைக்கப்பட்ட Cry2Ab 5-எண்டோடாக்சினைக் கொண்ட ஒரு "இணைவுப் புரதம்" உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பம் தாவரங்களில் செயல்படுத்தப்படுவதற்கு, ஒரு "இணைவுப் புரதத்தை" உருவாக்குவது இந்த விஷயத்தில் மிக முக்கியமானது. *பாசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்* வகை பாக்டீரியா அத்தகைய இணைவுப் புரதத்தை உற்பத்தி செய்வதில்லை. காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளின் கோரிக்கைகள் 25-27-இன் கீழ் பாதுகாக்கப்பட்ட, வாதிகளின் இந்தத் தொழில்நுட்பம் மட்டுமே ஒரு பருத்தித் தாவரமானது Cry2Ab எண்டோடாக்சினை உற்பத்தி செய்ய அனுமதிக்கிறது என்பது வாதிகளின் உரிமைக் கோரிக்கையாகும். இந்த விவாதத்திற்குரிய காப்புரிமையானது, *பாசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்* வகையைப் பயன்படுத்துவதையும் மற்றும் Cry2Aa மற்றும் Cry2Ab எனப் பெயரிடப்பட்ட இரண்டு மரபணுக்களின்

உருவாக்கத்தையும் கோருகிறது. ஒவ்வொரு மரபணு வரிசையும் பூச்சிக்கொல்லிப் பண்புகளைக் கொண்ட புரதங்களைத் தொகுக்கும் திறனுக்காக அறியப்பட்டவை.

21. வாதியின் கோரிக்கையின் காப்புரிமை அல்லாத தன்மையைத் தவிர, அவர்கள் காப்புரிமை பெற்ற உரிமைகளை மீறவில்லை என்பது பிரதிவாதிகளின் வாதமாகும்:

"அ) நுசிவீடு மரபணு மாற்றப்பட்ட பருத்தி விதையுடன் தங்கள் பி.டி. பருத்தி வகைகளின் விதைகளை விதைத்தது.

ஆ) மரபணு மாற்றப்பட்ட பி.டி. பருத்தி விதைகளும், நுசிவீடு ரக விதைகளும் வெவ்வேறு தாவரங்களை விளைவித்தன; அவை பூக்கும் நிலையில் அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டன.

இ) நுசிவீடு பருத்தி வகைகளின் பருத்தி விதைகள் பருத்தி விதைகளைக் கொண்டிருந்தன, அவை தனியுரிம கலப்பினத்தை ("பிடி. பருத்தி கலப்பினங்கள்") சுமந்து கொண்டிருந்தன

ஈ) நுசிவீடு புதியதாக உருவாக்கப்பட்ட பிடி பருத்தி வீரிய ஒட்டு இரகங்களின் பயன்பாட்டினை விவசாயிகளுக்கு கண்டறிய விரிவான வேளாண் மதிப்பீட்டு சோதனைகளை நடத்தியது.

உ) உள்முறை மதிப்பீட்டிற்குப் பிறகு திருப்திகரமாகக் கருதப்பட்ட ஒவ்வொரு புதிய பி.டி. பருத்தி கலப்பினத்தையும் வணிக ரீதியாக வெளியிடுவதற்காக, 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழ்நிலை (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலை நுசிவீடு நிறுவனம் பெற்றது; அதன் பிறகு அவை பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன."

22. வெளிப்படையாகக் கூறினால், பிரதிவாதிகளின் எதிர் பாத்தியம் குறித்து அறிவார்ந்த தனி நீதிபதி ஒருபோதும் பரிசீலிக்கவில்லை, ஏனெனில் அதன் மீது நோட்டீஸ் மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது. உரிமக் கட்டணம்/பண்பு மதிப்பு தொடர்பான இடைக்காலத் தடையுத்தரவின் தன்மைக்கு எதிராக வாதிகள் மேல்முறையீடு செய்திருந்தனர், அது தற்போது வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நடைமுறையிலுள்ள ஒரு காப்புரிமையை, தகுதி அடிப்படையிலான நீதித்தீர்ப்பு ஏதுமின்றி ஒரு சுருக்கமான விசாரணை மூலம் இழக்கும் அபாயத்தை வாதிகள் ஏன் ஒப்புக்கொள்ளப் போகிறார்கள் என்ற முனைவர் சிங்வியின் வாதத்தை நிராகரிக்க எங்களுக்கு எந்தக் காரணமும் தெரியவில்லை. ஒரு முழுமையான விசாரணையில் பரிசீலிக்கப்பட வேண்டிய சிக்கலான விவகாரங்கள் இவை என்பதால், இதற்கு நிபுணர் சாட்சியங்கள் தேவை

என்று பிரதிவாதிகளே தங்கள் மேல்முறையீட்டில் வாதிட்டிருந்தனர். எனவே, வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், தடையுத்தரவு வழங்கப்பட்டது நியாயமானதா அல்லது அநியாயமானதா என்ற கேள்வியுடன் மட்டுமே நீதியர் ஆயம் தனது நீதித்தீர்ப்பை வரம்பிற்குட்படுத்தி இருந்திருக்க வேண்டும். 1-24 வரையிலான செயல்முறை கோரிக்கைகளின் காப்புரிமை பெறத்தகாத தன்மை குறித்து தீர்மானிக்கும் தனி நீதிபதியின் அதிகார வரம்பைத் தானாகவே எடுத்துக்கொண்டு, தற்போது செய்யப்பட்டுள்ளவாறு ஒரு சுருக்கமான முறையில் அந்த எதிர் பாத்தியம் குறித்து நீதியர் ஆயம் பரிசீலித்திருக்கக் கூடாது. தொழில்நுட்ப ரீதியாகச் சிக்கலான, நிபுணர் சாட்சியங்கள் தேவைப்படும் ஒரு வழக்கை, தடையுத்தரவு கோரும் நிலையில் தற்போது செய்யப்பட்டுள்ளவாறு சுருக்கமான முறையில் நீதித்தீர்ப்பு வழங்குவது என்பது நிச்சயமாக விரும்பத்தக்கதும் அல்ல, சட்டத்தால் அனுமதிக்கப்படக்கூடியதும் அல்ல. இந்த வழக்கானது காப்புரிமை பெறத்தக்கத் தன்மை மற்றும் காப்புரிமையிலிருந்து விலக்களித்தல் ஆகிய விவகாரங்கள் குறித்து, சட்டம் மற்றும் உண்மைகள் கலந்த சிக்கலான கேள்விகளைக் கொண்டுள்ளது; இவை சாட்சியங்களின் அடிப்படையில் வழக்கின் விசாரணையின்போது மட்டுமே ஆராயப்பட வேண்டியவை ஆகும்.

23. சட்டத்தின் பிரிவு 64, ஒரு வழக்கில் தாக்கல் செய்யப்படும் எதிர் பாத்தியம் அடிப்படையில் காப்புரிமையை ரத்து செய்வதற்கு வழிவகை செய்கிறது. இது, வழக்கிலுள்ள கோரிக்கைகள் மற்றும் எதிர் பாத்தியம் குறித்து சட்டத்தின்படி ஒரு முறையான பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதை அவசியமான முன்நிபந்தனையாகக் கொள்கிறது; மாறாக, சாட்சியங்கள் ஏதுமின்றி பாடப்புத்தகங்களின் அடிப்படையிலான மேலோட்டமானக் கருத்துக்களைக் கொண்டு சுருக்கமான நீதித்தீர்ப்பு வழங்குவதை அல்ல. பிரிவு 9-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு மற்றும் அதில் உள்ள எதிர் பாத்தியம் ஆகியவை எந்த முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் மற்றும் தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்பது குறித்த விரிவான நடைமுறையை உரிமையியல் நடைமுறைச் சட்டம் வழங்குகிறது. உரிமையியல் நடைமுறைச் சட்டம், வழக்குக் கருப்பொருட்களைத் தீர்மானித்தல், ஆவணங்களைக் கண்டறிதல்/ஆய்வு செய்தல் உள்ளிட்ட தரப்பினரின் சாட்சிகளை விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்தல் ஆகிய நடைமுறைகளை கட்டாயமாக்குகிறது; இவை வழக்கின் விசாரணை மற்றும் தீர்ப்பாணையில் நிறைவடைகின்றன. ஒரு வழக்கை அதன் ஆரம்ப நிலையிலேயே, கட்டளை 12 விதி 6-இன் கீழான ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அல்லது கட்டளை 16 விதி 1-இன் கீழ் தரப்பினரிடையே

முரண்பாடுகள் இல்லாதபோது மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற காரணங்களின் அடிப்படையில் மட்டுமே முடிக்க முடியும்; ஆனால், இவை எதுவுமே இந்த விவகாரத்திற்குப் பொருந்தாது. எனவே, தற்போதைய வழக்கின் உண்மைகளைக் கருத்தில் கொண்டு, பொதுவெளியில் இருந்து எடுக்கப்பட்டதும், இந்த வழக்கில் சான்று ஆவணங்களாக தாக்கல் செய்யப்படாததுமான ஆவணங்களை மட்டுமே நம்பி, அதுவும் நிபுணர் சாட்சிகளை விசாரணை செய்யாமல், நீதியர் ஆயம் ஒரு சுருக்கமான முறையில் வழக்கைத் தீர்த்திருக்கக் கூடாது என்பதில் நாங்கள் திருப்தியடைகிறோம்.வேதியியல் செயல்முறை, உயிர்வேதியியல், உயிரித் தொழில்நுட்பம் மற்றும் நுண்ணுயிரியல் செயல்முறைகள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் மிக முக்கியமாக, ஒருமுறை புகுத்தப்பட்ட நியூக்ளிக் அமில வரிசைப் பண்பை அந்த ரகத்திலிருந்து நீக்க முடியுமா இல்லையா என்பது குறித்தும், காப்புரிமை பெற்ற டி.என்.ஏ வரிசையானது ஒரு தாவரமா அல்லது தாவரத்தின் ஒரு பகுதியா என்பது குறித்தும் எழுப்பப்பட்ட வினாக்கள் சிக்கலானவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை; இவை அனைத்தும் தொழில்நுட்ப மற்றும் நிபுணர் சாட்சியங்கள் தேவைப்படும் விவகாரங்கள் என்பதோடு, மீண்டும் இவை அனைத்தும் வழக்கின் இறுதி விசாரணையின்போது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்களாகும்.

24. சட்டத்தின் 9-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கைக் கையாள வேண்டிய மற்றும் தீர்மானிக்க வேண்டிய விதம் குறித்து, ***அல்கா குப்தா எதிர் நரேந்தர் குமார் குப்தா***, (2010) 10 எஸ் சி சி 141 என்ற வழக்கில் பரிசீலனைக்கு வந்தது, பின்வருமாறு அவதானித்தது:

> "27. உரிமையியல் நடைமுறைச் சட்டம் என்பது ஒரு நீதிமன்றத்தில் நடைபெறும் நடைமுறைகள் தொடர்பாக, இயற்கை நீதிப் பண்புகளின் விரிவான தொகுப்பு மற்றும் வரிசைப்படுத்தல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இந்தச் சட்டத்தின் முழுமையான நோக்கம் என்னவென்றால், ஒரு நீதிமன்றத்தால் நடத்தப்படும் நீதித்தீர்ப்பானது பொருத்தமான நிலைகளில் பொருத்தமான வாய்ப்புகளுடன் நடத்தப்படுவதை உறுதி செய்வதே ஆகும். இந்தச் சட்டத்தினால் நிர்வகிக்கப்படும் ஒரு உரிமையியல் நடைமுறையானது, சட்டத்தின்படியும் இந்தச் சட்டத்தின் விதிகளின்படியும் மட்டுமே தொடரப்பட வேண்டும் மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டும், மாறாக நீதிமன்றத்தின் தன்னிச்சையான விருப்பங்களின்படி அல்ல. சட்டத்தால் வழங்கப்பட்டாலன்றி, வழக்குகளின் விசாரணையில் குறுக்குவழிகள் ஏதுமில்லை. உரிமையியல் நடைமுறைச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டம் ஒரு விதிவிலக்கை அளித்தாலோ

அல்லது விலக்கு அளித்தாலோ தவிர, மற்றபடி ஒரு உரிமையியல் வழக்கானது, வழக்குக் கருப்பொருட்களைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினைகள் குறித்துத் தரப்பினர்கள் சாட்சியங்களை முன்னிலைப்படுத்த அனுமதிக்கும் ஒரு விசாரணைக்குப் பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும்.

…….

30. ஆனால், வழக்குக் கருப்பொருட்களைத் தீர்மானிப்பதற்காக அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, ஒரு முதற்கட்டப் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்காக வழக்கு பட்டியலிடப்பட்டிருக்கும் போது, ஒரு முழுமையான விசாரணை இன்றி, வாதிகளின் செயல்பாடுகள், கோரிக்கையின் நிலைத்தன்மை, ஆவணங்களின் வலிமை மற்றும் செல்லுபடித்தன்மை ஆகியவை குறித்து நீதிமன்றம் ஒரு மேலோட்டமான ஆய்வை மேற்கொள்ள முடியாது; மேலும் அதன் அடிப்படையில் ஒரு வழக்கைத் தள்ளுபடி செய்ய முடியாது. ஒரு முழுமையான விசாரணை இன்றி, வெறும் வாதுரைகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மட்டுமே கொண்டு, உண்மைகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்மானிப்பதன் மூலம் ஒரு வழக்கின் நடைமுறையை குறுக்குவழியில் முடிக்க முடியாது.

31. இந்த வழக்கில், கற்றறிந்த தனி நீதிபதி, குறுக்கு விசாரணையின் மூலம் சோதிக்கப்பட்ட சாட்சியங்கள் ஏதுமின்றி, உண்மைகள் தொடர்பான கேள்விகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளார்...."

25. நீதியர் ஆயம், கற்றறிந்த தனி நீதிபதி வழங்கிய தடையுத்தரவு ஆணையின் செல்லுபடித்தன்மையை ஆய்வு செய்வதோடு மட்டுமே தன்னை மட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, தனி நீதிபதி வழங்கிய தடையுத்தரவு நிவாரணத்தின் தன்மை முறையாகவே உள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் நாங்கள் திருப்தியடைவதால், அந்த நோக்கத்திற்காக இந்த விவகாரத்தை மீண்டும் நீதியர் ஆயத்திற்கு அனுப்ப நாங்கள் விரும்பவில்லை.

26. நீதியர் ஆயத்தின் உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. 28.03.2017 தேதியிட்ட தனி நீதிபதியின் உத்தரவு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது மற்றும் இந்த வழக்கின் விசாரணையை சட்டத்தின்படி முடித்துவைப்பதற்காக மீண்டும் தனி நீதிபதியிடமே ஒப்படைக்கப்படுகிறது. இதில் தொடர்புடைய கேள்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு,

தரப்பினர்கள் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்றும், தனி நீதிபதி இந்த வழக்கினை விரைவாக முடித்துவைப்பதற்குத் துணை நிற்பார்கள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

27. மேல்முறையீடுகள் மற்றும் இடையீட்டு மனுக்கள் இத்துடன் முடித்துவைக்கப்படுகின்றன.

மேல்முறையீடுகள் முடித்துவைக்கப்பட்டன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."